***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 04/2018**

**P.W.2 திரு.முருகன் த/பெ.அடைக்கன் நாள் – 12.02.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1 முதல் 7, 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை :–**

நான் யோகாம்பாள்புரத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். கோங்குடி கிராமம் எங்கள் ஊரிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அடைக்கனின் பூர்வீக சொத்துக்கள் கோங்குடி கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். மணி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி மணி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கோங்குடி, அழியாநிலை கிராமத்தில் உள்ள சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கோங்குடி கிராமத்தில் எந்தெந்த சொத்துக்கள் உள்ளது என்றும், அழியாநிலை கிராமத்தில் எந்தெந்த சொத்துக்கள் உள்ளது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நஞ்சை நிலங்கள் மற்றும் புஞ்சை நிலங்கள் என்னென்ன என்று எனக்கு தெரியும். தாவா சொத்துக்களில் என்னென்ன சொத்துக்கள் நஞ்சை நிலங்கள், எவை புஞ்சை நிலங்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால் இரண்டு கிராமத்திலும் பூர்வீக சொத்துக்கள் உள்ளது. பூர்வீக சொத்துக்கள் என்றால் மணியின் தகப்பனார் சுப்பையா பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம். சுப்பையா பெயரில் உள்ள சொத்துக்கள் மட்டும் தான் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். நான் 1962ம் வருடம் பிறந்தேன். எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் வாதிகள் குடும்பத்திற்கு எங்கள் கிராமத்தில் சுமர் 15 ஏக்கர்

நிலம் உள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்தெந்த சொத்துக்களில் இருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல , எனக்கு நேரடியாக தெரியும். நான் நெல் வியாபாரம் எதுவும் செய்யவில்லை . அவர்கள் என்னிடம் நெல் விற்றார்களா என்றால் இல்லை . நான் ஆடு, மாடு விற்பனை செய்யும் வியாபாரம் செய்வதில்லை என்றால் சரிதான் . கண்டனூரில் 1982ம் ஆண்டு ஒரு அரிசி மில் வாங்கப்பட்டது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும் . அதற்கான கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோங்குடி கிராமத்தில் தாவா சொத்திற்கும், எனது சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 அடி இருக்கும். அந்த சொத்துக்களில் கேணி உள்ளதா என்றால் இல்லை , ஆற்றுப்பாசனம் தான் உள்ளது . சுப்பையாவின் பூர்வீக சொத்துக்களில் எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்து தான் மில் வாங்கப்பட்டது என்று மணி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை . எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் மணி என்னிடம் சொல்லி , அதன்அடிப்படையில் மணிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மணி எனது உறவினரா என்றால் இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*